1972 ஏப்ரல் 6]

**திரு. ந. நாச்சியப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், மாவட்ட வனத்துறை அலுவலரும் இந்தக் காட்டுப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, வேளாண்மைப் பண்ணை வைக்க அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்புவதாகக் கூறிச் சென்றார்கள். அப்படி அனுப்பாமல் இருந்தால் அந்தக் காடு நல்ல நீர்வளமும் நிலவளமும் கொண்டிருப்பதாலும், அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதாலும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயக் கூலிகளுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே இந்தப் பகுதியில் அரசு விவசாயப் பண்ணை ஏற்படுத்துவதற்கு மீண்டும் புனராலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் கொடுக்கப்பட்ட அந்தக் கோரிக்கையை வன இலாக்கா அது பற்றிய திட்டம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். வருகின்ற ஆண்டிலே வன இலாக்கா அதிலே காட்டுப் பயிரிட ஏற்பாடு செய்ய ஓராண்டுத் திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள்.

### ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஜீப் கார்கள்

*908 **வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு I.A.D.P மூலம் ஜீப் கார்கள் வழங்கப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி.** ஆம்.

**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் கோடைக் காலங்களில் சாகுபடி செய்யலாம் தஞ்சை மாவட்டத்தில் என்று அண்மையில் அறிவித்திருக்கிறார்கள். எனவே அதற்கேற்ப ஜீப் கார்கள் அதிகமாக அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, கோடை காலத்திற்கு என்று ஜீப் தேவை இல்லை. அந்த ஜீப் ஆண்டுபூராவும் ஓடிக் கொண்டிருக்கும் ஜீப்தான். ஆகவே கோடை காலத்திற்கு என்றும், இரண்டாம் போகத்திற்கு என்றும், முதல் போகத்திற்கு என்றும் விகிதாச்சாரம் தேவையில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த ஜீப்புகளை யார் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவரா அல்லது அக்ரிகல்சர் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் பயன்படுத்துகிறாரா ? யார் பயன்படுத்துகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் கையில் இருக்கிறது. எப்பொழுதெப்பொழுது விவசாயத்திற்குத் தேவை இருக்கிறதோ, அந்தந்தக் காலங்களிலே அதைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும் பிறகு நெல் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டுகின்ற வடார்க்காடு மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஜீப்புகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான் அந்த ஐ.ஏ.டி.பி. திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் வெளிநாட்டால் புகுத்தப்பட்ட திட்டம், தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் கிடைத்திருக்கிறது. அந்தப் பணத்தை வைத்துச் செய்கிறார்கள். நம் மாநில அரசு அந்தத் திட்டத்தை ஆரம்பிக்காத காரணத்தால் மற்ற மாவட்டங்களுக்குச் செய்ய முடியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் எண்ணம் உண்டா? மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மற்ற மாவட்டங்களில் தீவிர சாகுபடித் திட்டம் மாநில அரசால் நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொருத்தவரையில் இது ஐ.ஏ.டி.பி. திட்டம்.

### கிராமப்புறங்களில் வீட்டு வசதிகள்

***909 வினா.—திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் வீட்டு வசதியைப் பெருக்க அரசாங்கம் ஏதாவது புதிய திட்டங்கள் அமைக்கவிருக்கிறதா?

(இ) ஆம் என்றால், அவை யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) இந்திய அரசு, கிராமப்புறங்களில் வீட்டு மனை இல்லாத தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 100 சதவீதம் மானியமாக, மாநில திட்ட வரம்பிற்குப் புறம்பாக மாநிலங்களுக்குச் சில நிபந்தனைகளின் கீழ் வழங்கும். இத் திட்டத்தை முதலில் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்த, அதற்கான செயற்குறிப்பு ஒன்றை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற அனுப்பப்பட்டிருக்கிறது.